www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Vnr12Eco

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 12

நேரம் : 3.00 மணி

பொருளியல்

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) நவீன பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம். கீன்ஸ் இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

2) ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ............ ஆகும்.
அ) உற்பத்தி ஆ) இருப்பு இ) மாறிலி ஈ) ஓட்டம்

3) இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ............
அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30 வரை
இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 வரை ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

4) இரண்டாம் துறை ............ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) பணிகள் ஆ) வருமானம் இ) தொழில் ஈ) உற்பத்தி

5) சமநிலையை கீன்ஸிடைய கோட்பாடு வலியுறுத்தியது
அ) மிகக் குறுகிய காலம் ஆ) குறுகிய காலம் இ) மிக நீண்ட காலம் ஈ) நீண்ட காலம்

6) கீன்ஸின் கோட்பாட்டில் பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ஆகும்.
அ) வட்டி வீதம் ஆ) விளைவு தேவை இ) தொகுத்தேவை ஈ) தொகு அளிப்பு

7) MPC = 0.75 எனில் பெருக்கியின் மதிப்பு
அ) 2 ஆ) 1/2 இ) 4 ஈ) 20

8) சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது
அ) C/Y ஆ) CY இ) Y/C ஈ) C+Y

9) பணவீக்கம் என்பது
அ) விலைகள் அதிகரிப்பு ஆ) விலைகள் குறைத்தல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு ஈ) விலைகள் மாறாதிருத்தல்

10) பற்று அட்டை என்பது ............ உதாரணம் ஆகும்.
அ) கட்டளைப் பணம் ஆ) காகிதப் பணம் இ) நெகிழி பணம் ஈ) கடன் பணம்

11) கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினை செய்வது
அ) மைய வங்கி ஆ) வணிக வங்கிகள்
இ) நிலவள வங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள்

12) நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
அ) ஜூலை 1962 ஆ) ஜூலை 1972 இ) ஜூலை 1982 ஈ) ஜூலை 1992

13) இது மைய வங்கியின் நோக்கம் அல்ல.
அ) பணவியல் கட்டுப்பாடு ஆ) காகித பணம் வெளியீடு
இ) இலாபமீட்டல் ஈ) வளர்ச்சி வங்கி

14) இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?
அ) வங்கி ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு

15) அயல்நாட்டு செலுத்து சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பவற்றில் எவை?
அ) நடப்பு கணக்கு ஆ) மைய வங்கி இருப்பு
இ) மூலதன கணக்கு ஈ) மேற்கண்ட அனைத்தும்

16) பிற நாடுகளுடன் வணிகம் செய்யாத நாடுகள்
அ) வளர்ந்த பொருளாதாரம் ஆ) மூடப்பட்ட பொருளாதாரம்
இ) திறந்துவிடப்பட்ட பொருளாதாரம் ஈ) வளர்ச்சியற்ற பொருளாதாரம்

17) பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்காணும் இதன் துணை அமைப்பாகும்.
அ) பன்னாட்டு பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்

18) காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் முதலானவை உடன் தொடர்புடையவை
அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ் ஈ) NAMA

19) சிறப்பு எடுப்புரிமைகள் எதனுடன் தொடர்புடையது?
அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி
இ) புதிய மேம்பாட்டு வங்கி ஈ) பன்னாட்டு நிதிக்கழகம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



20) "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" நூல் ............ இல் வெளியிடப்பட்டது.
அ) 1930 ஆ) 1936 இ) 1911 ஈ) 1947

## பகுதி - II

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×2=14

21) வருமானத்தின் வட்ட ஓட்டம் - வரையறு.
22) செலவிடக்கூடிய வருமானம் என்றால் என்ன?
23) மெய் நிகர் பணம் என்றால் என்ன?
24) தன்னிச்சையான முதலீடு என்றால் என்ன?
25) வணிக வங்கிகள் என்பதனை வரையறு.
26) தடையற்ற வாணிக பகுதி என்றால் என்ன?
27) இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) வரையறு.
28) வணிக செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?
29) பன்னாட்டுக் கூட்டமைப்பு தலைமையிடம் எழுதுக.

| நிறுவனம் | தலைமையிடம் |
|---|---|
| பன்னாட்டு பண நிதியம் | ? |
| உலக வணிக அமைப்பு | ? |
| SAARC | ? |
| BRICS | ? |

30) மறைமுக வேலையின்மை என்றால் என்ன?

## பகுதி - III

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×3=21

31) பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.
32) நாட்டு வருமானத்தை கணக்கிடுதலின் பயன்களை பட்டியலிடுக.
33) தொகுப்பு அளிப்பின் (ASF) வரைபடம் மூலம் விளக்குக.
34) ஒரு பொருளாதாரத்தில் பண வீக்கத்திற்கான காரணங்கள் யாவை?
35) நபார்ட்டின் பணிகள் யாவை?
36) பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
37) மொத்த நிகர பண்டப் பரிமாற்று வாணிக வீதத்தை சுருக்கமாக எழுதுக.
38) சார்க்கின் பணிகளை சுருக்கமாகக் கூறுக.
39) வட்டார ஊரக வங்கி குறிப்பு வரைக.
40) வருமானம் = 10,000, நுகர்வு = 6,000, சேமிப்பு = 4,000, வருமானம் மாற்றம் = 2,500, நுகர்வு மாற்றம் = 1,000, சேமிப்பு மாற்றம் = 1,500 எனில் சராசரி நுகர்வு நாட்டம் (APC), இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC), சராசரி சேமிப்பு நாட்டம் (APS), இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) கணக்கிடுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்:** 7×5=35

41) அ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க. (அல்லது)
ஆ) அயல்நாட்டு செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.

42) அ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக. (அல்லது)
ஆ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

43) அ) முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக. (அல்லது)
ஆ) குறிப்பு எழுதுக: (அ) சார்க் (ஆ) பிரிக்ஸ்

44) அ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் (MEC) திறனுக்கும் முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
ஆ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.

45) அ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக. (அல்லது)
ஆ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

46) அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

47) அ) நாட்டு வருமானம் கணக்கிடும் முறைகளை விளக்குக. (அல்லது)
ஆ) ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிக வீத வகைகளை விவரி.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com